சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.34/2019

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திருமதி. தனம்மாள் | நாள்.29.01.2026 |
| க/பெ. | |
| வயது. | வட்டம் |
| கிராமம். | மாவட்டம். |

**<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>**

நான் வழக்கில் வாதி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். 01.12.1971 தேதியில் பெரியசாமி மற்றும் ஒருவர் கண்ணப்பனுக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தின் சார் பதிவு நகல் **வா.த.சா.ஆ.1.** 10.06.1981 தேதியில் சீனுவாசன், கண்ணப்பனுக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தின் சார் பதிவு நகல் **வா.த.சா.ஆ.2.** 08.06.2005 தேதியில் கண்ணப்பன், எனக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தின் சார் பதிவு நகல் **வா.த.சா.ஆ.3.** (அசல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை எழுப்பப்பட்டது. ஆட்சேபணைக்கு உட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது) வழக்கு சொத்திற்கான தீர்வை ரசீதுகள் (எண்ணம் 9) **வா.த.சா.ஆ.4.** வழக்கு சொத்திற்கான

வீட்டு வரி ரசீதுகள் (எண்ணம் 7) **வா.த.சா.ஆ.5.** வழக்கு சொத்திற்கான கணிணி பட்டா நகல்கள் முறையே **வா.த.சா.ஆ.6 மற்றும் 7.** வழக்கு சொத்திற்கான வழிகாட்டு மதிப்பீடு **வா.த.சா.ஆ.8.** மு.வ எண் 129/2008 என்ற வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை **வா.த.சா.ஆ.9 மற்றும் 10.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)